# 5

# பிக்ஹுல் மாலிய்யாத்

## 5.1 உழைப்பின் முக்கியத்துவம்

மனிதனுடைய வாழ்வாதாரத்துக்காகப் பொருளீட்டல், உழைத்தல் என்பன அவனது வாழ்வில் பிரதானமான பங்கை வகிக்கின்றன. ஒருவருக்குப் பொருளாதார வசதியின்றி உலகத்தில் வாழ முடியாது. அல்லாஹ் இப்பரந்த விரிந்த பூமியைப் படைத்து மனிதனுக்குப் பயனுள்ள அநேகமான வளங்களைக் கொண்டு நிரப்பியுள்ளான். சில பொருட்கள் இனாமாகக் கிடைக்கின்ற அதே நேரம் அநேகமான பொருட்களை மனிதன் பிரயத்தனம் செய்தும் இன்னும் சிலவற்றை அவன் உற்பத்தி செய்தும் பெற்றுத் தனது தேவைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளான். அல்லாஹ் பூமியை அவ்வாறு ஆக்கிவைத்துள்ளான்.

பொருளீட்டுவதற்காக ஒருவன் உழைக்க வேண்டும். உழைத்து வாழ்வதன் சிறப்பை அல்லாஹ்வும் அவனது ரஸூலும் மேம்படுத்திக் கூறியுள்ளார்கள். ஒரு வேலையும் செய்யாமல் பிறரை அண்டி வாழ்வதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. ஒருவன் தன்னுள் அமைந்துள்ள திறமைகளைப் பயன்படுத்தி அனுமதிக்கப்பட்ட வகையில் செல்வம் திரட்ட வேண்டும் என்பதில் இஸ்லாம் அக்கறை காட்டுகின்றது.

அல்-குர்ஆன் ஜிஹாதுக்குச் செல்வோரையும் உழைப்புக்குச் செல்வோரையும் இணைத்துக் கூறுகின்றது.

***''அவன் (அல்லாஹ்) தான் உங்களுக்குப் பூமியை விரிப்பாக ஆக்கிவைத்துள்ளான். எனவே அதனது பலகோணங்களிலும் சென்று அவன் அளித்திருப்பவைகளை புசிப்பீராக!'' (67:15)***

### நபிமார்களின் வழிகாட்டல்கள்

மக்களுக்கு நேர்வழிகாட்ட வந்த எல்லா நபிமார்களும் ஒரு தொழிலைச் செய்தே வந்துள்ளார்கள். ஆதம் (அலை) அவர்கள் விவசாயியாகவும், தாவூத் (அலை) அவர்கள் கொல்லனாகவும் வாழ்ந்து வந்துள்ளார்கள். நபி நூஹ் (அலை) அவர்கள் தச்சனாகவும், நபி இத்ரீஸ் (அலை) அவர்கள் தையல்காரராகவும், நபி மூஸா (அலை) அவர்கள் இடையராகவும், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வியாபாரியாகவும் இருந்து பொருளீட்டியுள்ளார்கள்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறுபிராயம் முதலே பிறருக்குச் சுமையாக இருக்க விரும்பவில்லை. அன்னை ஹலீமா அவர்களின் பராமரிப்பில் இருந்த காலப்பகுதியில் அவர்களது ஆடுகளை மேய்ப்பதில் துணையாக இருந்தார்கள். சிறிய தகப்பனார் அபூதாலிப் அவர்களின் பராமரிப்பில் இருந்தபோது வர்த்தகத்தில் அவர்களுக்குத் துணையாக இருந்துள்ளார்கள். வாலிபத்தில் கதீஜா நாயகியின் வர்த்தகப் பொருட்களை ஷாம் தேசத்திற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்யும் முகவராகப் பணியாற்றினார்கள்.

*தன் கைகளால் உழைத்து உண்பதை விட வேறு எந்தச் சிறந்த உணவையும் எவரும் உட்கொள்வதில்லை? (புகாரி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியள்ளார்கள்.*

ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்த ஒருவர், தனக்கு ஏதாவது தருமாறு கேட்டு நின்றார். அவரைப் பார்த்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''உம்முடைய வீட்டில் ஏதாவது உண்டா? எனக் கேட்டார்கள்'' அதற்கு, அவர் ஒரு போர்வையும் ஒரு பாத்திரமும் இருப்பதாகக் கூறினார். உடனே அப்பொருட்களைக் கொண்டுவரும்படி கட்டளை இட்டார்கள். அவை கொண்டுவரப்படதும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவற்றை ஏலத்தில் விற்று இரண்டு திர்ஹம்களைப் பெற்றார்கள். இதில் ஒரு திர்ஹத்துக்கு உணவு வாங்கி உமது குடும்பத்திற்குக் கொடுப்பீராக. மீதியுள்ள ஒரு திர்ஹத்துக்கு ஒரு கோடாரி வாங்கி வருவீராக என்று கூறி அனுப்பி வைத்தார்கள். கோடாரி வாங்கி வரப்பட்டதும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதனைப் பெற்று தனது கையினால் ஒரு பிடியைப் பொருத்தி அவரிடம் கொடுத்தார். இதனைக்கொண்டு நீர் விறகுவெட்டி வாழ்க்கை நடத்துவீராக என்று வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள். அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லியவாறு விறகு வெட்டி விற்பனை செய்தார். பதினைந்து நாட்களுக்குப் பின்னர் மீண்டும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சந்திக்க வந்தார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தனது வருமானத்தைப் பற்றி எடுத்துக்கூறி திருப்தியடைந்தார். அதற்கு நன்றியும் தெரிவித்தார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''இரந்து வாழ்ந்து, இறுதிநாளில் முகத்தில் கருநிற முத்திரையுடன் வருவதை விட இது மிகச் சிறந்ததாகும்'' (திர்மிதி) என்று கூறி அவரை வழி அனுப்பி வைத்தார்கள்.

*மற்றொரு தடவை உழைத்து உழைத்து வடுவேறிய ஒரு தொழிலாளியின் கையைப் பற்றிப் பிடித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸாபஹாச் செய்து நீண்டநேரம் அவரது கையைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். இதனைப் பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டபோது ''நிச்சயமாக அல்லாஹ் தொழில் புரியும் விசுவாசியை நேசிக்கின்றான்'' (தபரானி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உழைப்பாளியின் கையை மேம்படுத்திக் கூறினார்கள்.*

''எவர் ஹலாலான உழைப்பில் ஈடுபட்டு களைப்படைந்த நிலையில் ஓர் இரவை அடைகின்றாரோ அவர் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலையில் அவ்விரவை அடைந்தவராவார்'' (இபுனு அஸாகிர்)

ஒருவன் தன் இரு கைகளாலும் உழைத்து உண்ணும் உணவே மேலானது. எனவும், உழைப்பாளியின் வியர்வை உலர்ந்துவிட முன் அவனது கூலியைக் கொடுத்துவிட வேண்டும் எனவும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எமக்குப் பணித்துள்ளார்கள்.

## ஸஹாபாக்களின் வாழ்விலிருந்து

மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற ஸஹாபாக்களில் சிலர் அன்ஸாரிகளின் அன்பளிப்புக்களை ஏற்க மறுத்ததோடு, தங்களுக்கு மதீனாவில் கடைத்தெருவை (சந்தையை)க் காட்டித்தருமாறு கேட்டு நின்றார்கள்.

அரா இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜும்ஆத் தொழுகை முடிவடைந்ததும் பள்ளியில் முன்வாயிலில் வந்து நின்று கீழ்க்காணுமாறு பிரார்த்திப்பவராக இருந்தார்கள். ''யா அல்லாஹ்! உனது அழைப்புக்கு விடையளித்தேன். நீ விதியாக்கிய கடமையை நிறைவேற்றினேன். உனது கட்டளைக்கு இணங்க பூமியில் பரவிச் செல்கிறேன். உனது அருளை எனக்களிப்பாயாக! அருள்புரிவோரில் நீ மிகவும் சிறந்தவன்.''

உழைப்பில் ஈடுபடாமல் மஸ்ஜிதில் தங்கியிருந்த சிலரைப் பார்த்து 'உங்களில் எவரும் உழைக்காமல் இருக்கக்கூடாது, அல்லாஹ்வே எனக்கு உணவளிப்பாயாக எனப் பிரார்த்தித்தால் மட்டும் போதாது. வானம் நாம் நினைப்பது போன்று தங்கத்தையோ வெள்ளியையோ பொழிவதில்லை' என உமர்(ரழி) அவர்கள் கூறினார்கள்.

மேலும், 'ஜிஹாதில் ஈடுபடும் நிலையில் அல்லது நான் அல்லாஹ்வின் அருளைத் தேடிக்கொண்டிருக்கும் நிலையில் எனக்கு மரணம் சம்பவிக்க வேண்டும்' என்று விரும்புகின்றேன் என்றும் கூறினார்கள்.

நாம் மேலே கற்றுக்கொண்ட குர்ஆன், ஸுன்னா, நபிமார்கள், ஸஹாபாக்களின் வழிகாட்டல்களிலிருந்தும் அவர்களின் நடைமுறைகளில் இருந்தும் உழைப்பின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொண்டோம்.

ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடுவதே மகத்தானதும் இறைவனின் கட்டளையுமாகும். உழைக்காமல் இருப்பதுவே இழிவானதாகும். எந்தத் தொழிலும் இழிவானதல்ல. சிலர் விவசாயம் செய்கின்றனர். சிலர் வியாபாரம், கைத்தொழில் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். மேலும் ஒரு பிரிவினர் கணக்காளர், பொறியியலாளர், வைத்தியர் போன்ற சிறப்பறிவுடன் தொடர்பான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். அது அவரவர்க்கு அல்லாஹ் அருளிய அருட்கொடையாகும்.

எமது உழைப்பு இஸ்லாம் கூறிய வழிமுறைக்கு ஏற்ப அமையும்போது அல்லாஹ் அதற்குரிய கூலியை ஈருலகிலும் அளிக்கின்றான். அத்தகைய உழைப்பில் பரகத் இருக்கின்றது. பிறர் தயவில் வாழாமல் சொந்த உழைப்பில் வாழவே நாம் முயற்சிக்க வேண்டும்.

## யாசகம்

தகுந்த காரணமின்றி யாசகம் புரிவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. எனவேதான், வறுமையிலிருந்து விடுபட்டு பொருளாதார வசதியோடு வாழ்வதற்காக இஸ்லாம் உழைக்குமாறு போதிக்கின்றது. பின்வரும் மூன்று ஹதீஸ்களும் யாசகம் கேட்டுத் திரிவதை விட உழைத்து வாழ்வதே மேல் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

1. ''நீங்கள் மக்களிடம் எதையும் யாசிக்க வேண்டாம். நீங்கள் பயணம் செய்து கொண்டிருக்கும்போது உங்களது சாட்டை கீழே விழுந்துவிட்டால் கூட (அதற்காக) பிறரிடம் உதவி கோர வேண்டாம். வாகனத்தை விட்டும் கீழே இறங்கி அதனை எடுத்துக் கொள்ளுங்கள்''. (அஹ்மத்)

2. ''ஒருவர் தொடர்ந்து யாசகம் கேட்டு வந்தால் மறுமையில் முகத்தில் சதை இல்லாத நிலையிலேயே வருவார்''. (புஹாரி, முஸ்லிம்)

3. ''பிறரிடம் யாசகம் கேட்பதை விட ஒருவர் தமது முதுகில் விறகுக் கட்டைகளைச் சுமந்து விற்கச் செல்வது சிறப்பானதாகும். அவர் பிறரிடம் யாசிக்கும்போது கொடுக்கவும் மறுக்கவும் செய்யலாம்'' (புஹாரி)

உழைப்பு மனிதனை சமூகத்தில் கௌரவத்துடன் வாழச் செய்கின்றது. யாசகம் கேட்டுத் திரிபவன் தனது கௌரவத்தையும் தன்மானத்தையும் இழக்க நேரிடும். எனவே, யாசகம் கேட்டுத் திரியாமல் அல்லாஹ் எமக்களித்த அருட்கொடைகளைக் கொண்டு உழைத்து வாழ்வோமாக.

## செயற்பாடுகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. எதிர்காலத்தில் நீர் ஈடுபட விரும்பும் தொழில் ஒன்றைக் குறிப்பிட்டு அதனை நீர் எவ்வாறு இஸ்லாமிய வரம்புக்குள் அமைத்துக் கொள்வீர் என்பதையும் விளக்குக.
2. ஒரு முஸ்லிம் உழைத்து வாழ வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுக.
4. உழைப்பின் மகத்துவம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு ஹதீஸ்களையும் இரண்டு குர்ஆன் வசனங்களையும் குறிப்பிடுக.
5. யாசகம் கேட்டுத் திரிவதை இஸ்லாம் எவ்வாறு தடுத்துள்ளது என்பதனை விளக்குக.

## 5.2 கொடுக்கல் வாங்கல்

வியாபாரம் என்பது பொதுவாக கொடுக்கல் வாங்கல் என வரையறை செய்யப்பட்டாலும், ஓர் உடமையை அல்லது ஒரு பொருளை பிரதியீடு ஒன்றைப் பெற்றுக்கொண்டு அதன் உரிமையைப் பிறிதொருவருக்குக் கையளிக்கும் நடவடிக்கையையே வியாபாரம் என்போம். வியாபாரம், இஸ்லாம் அங்கீகரித்த, இறைவனின் அருளைத் தேடும் ஒரு முயற்சியாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

***அவர்கள் இறையருளைத் தேடுகின்றனர்.'' (73:20) என்பது அல்-குர்ஆனின் கருத்தாகும்***

**வியாபாரத்தினதும் வியாபாரியினதும் முக்கியத்துவம்**

***தொழுகையை நிறைவேற்றி விட்டால் பூமியில் பிரிந்துசென்று இறை அருட்கொடைகளைத் தேடிக் கொள்ளுங்கள்.'' (அல்-குர்ஆன் 62:10)***

**இறைவனுடைய அருளை நீங்கள் தேடிக் கொள்வதற்காக கப்பல், நீரைப் பிழந்து கொண்டு செல்வதை நீங்கள் காண்கின்றீர்கள் (இதற்கு) நீங்கள் நன்றி செலுத்துங்கள்.'' (அல்-குர்ஆன் 32:12)**

நம்பிக்கையும் நாணயமும் கொண்ட வியாபாரிகள் (மறுமையில்) நபிமார்கள், ஷுஹதாக்கள், உண்மையாளர்கள் ஆகியோர்களுடன் எழுப்பப்படுவார்கள். (அல்-ஹதீஸ்)

வியாபாரத்தைப் பற்றி மட்டுமல்லாது வியாபாரியின் முக்கியத்துவம் பற்றியும் மேற்கூறிய வசனங்கள் மற்றும் ஹதீஸ்கள் நமக்கு எடுத்தியம்புகின்றன. நம் சமுதாயத்தில் இன்று அநேகர் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் அவர்களில் பலர் வியாபாரத்தின் முக்கியத்துவம், அதன் இஸ்லாமிய வரையறைகள், சட்டதிட்டங்கள் போன்றவற்றைக் கற்றறிந்தவர்களாக இல்லை. வியாபாரம் தொடர்பான சட்டதிட்டங்களை அறிந்து அவற்றைப் பின்பற்றுவது கடமையாகும்.

எமது நடவடிக்கைகள் அல்லாஹுத் தஆலாவினால் அங்கீகரிக்கப்பட்டு, அதற்காக கூலியும் எங்களுக்குக் கிடைக்க வேண்டுமாயின், அவை இஸ்லாமிய வரையறைகளை ஒட்டியதாக இருக்க வேண்டும். மாறாக நடந்தால் எமது பொருளீட்டல் நடவடிக்கைகள் பாவமானதாக அல்லது ஹராமானதாக மாறி அல்லாஹ்வின் தண்டனைக்கு உட்படுத்திவிடும்.

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சிலவேளைகளில் சந்தைக்குச் செல்வார்கள். வியாபாரம் தொடர்பான சட்ட விளக்கமுள்ளவர்களைத் தவிர ஏனையோர் எமது சந்தையில் வியாபாரம் செய்யக்கூடாது ஏனெனில் அத்தகையோர் விரும்பியோ விரும்பாமலோ வட்டியை உட்கொள்ள வேண்டி ஏற்படலாம். என எச்சரிப்பவர்களாக இருந்தார்கள்.

**வியாபாரத்திற்கான அடிப்படைகள்**

1. வாங்குவோன் - விற்போன்
2. வாங்கும் அல்லது விற்கும் பொருள்
3. ஈஜாப் - கபூல்

## 1. வாங்குவோன் - விற்போன்

ஒரு வியாபாரம் நடைபெறுவதற்கு வாங்குவோனும் விற்போனும் இருப்பது அவசியமாகும். இவ்விரு தரப்பினரும்

1. பருவமடைந்தவர்களாகவும்
2. புத்தியுள்ளவர்களாகவும்
3. வியாபாரம் பற்றிய விபரம் தெரிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

## 2. வியாபாரப் பொருட்கள்

வியாபாரப் பொருட்கள் ஷரீஅத் அடிப்படையில் பின்வரும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும்.

- சுத்தமானவை
- பயனுள்ளவை
- விற்பவருக்குச் சொந்தமானவை
- வாங்குபவருக்கு ஒப்படைக்கும் தகுதியுடையவை
- கையிருப்பில் உள்ளவை
- விலை நிர்ணயிக்கப்பட்டவை

**மேற்குறிப்பிட்ட விதிகளின் படி**

**பயனற்ற பொருட்கள்**

வாங்குவோருக்கு அல்லது விற்பவருக்கு எந்தப் பயனும் அளிக்காத பொருட்கள். உதாரணம் : சில பூச்சிகள் மற்றும் கழிவுப் பொருட்கள்.

**பிறருக்குச் சொந்தமானவை**

விற்பவர் பிறருக்குச் சொந்தமான பொருளொன்றை விற்பனை செய்ய முடியாது. உதாரணம் : அரச உடமைகள்.

**வாங்குபவரிடம் கையளிக்க முடியாத பொருட்கள்**

உதாரணம் : கடலில் வாழும் மீன்.

**விற்பனைப் பொருளோ விலையோ குறிப்பாக கூறப்படாதவை**

போன்றன விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளன. ஆயினும், சில வியாபாரப் பொருட்கள் கண்ணுக்குப் புலனாகாத தன்மையைக் கொண்டுள்ளன. கொள்கலனில் அடைத்து விற்கப்படுகின்ற எரிவாயு, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், புட்டிப்பால் போன்றவற்றை விற்பனை செய்வது தடையாகாது.

## 3. ஈஜாப் - கபூல்

ஈஜாப் என்பது பொருளை விற்கும் வியாபாரி தான் குறித்த பொருளை குறிப்பிட்ட நபருக்கு விற்று விட்டதாகவும், கபூல் என்பது அப்பொருளைக் குறிப்பிட்ட நபரிடமிருந்து நுகர்வோன் வாங்கிக் கொண்டதாகவும் வெளிப்படுத்தும் சொற்பிரயோகமாகும். இது வாய்மொழி மூலமாகவோ எழுத்திலோ அமையலாம்.

## வியாபாரக் கொடுக்கல் - வாங்கலின் போது தடுக்கப்பட்டவைகள்.

1. பொய் சத்தியம் செய்தல்

   பொய்சத்தியம் இவ்வுலகில் மனிதனை பாவத்துக்கு ஆளாக்கிவிடும் மறுமையில் நரக வேதனைக்கு அவனை இட்டுச் செல்லும்.

2. அளவை நிறுவைகளில் மோசடி

   ''யார் மோசடி செய்கின்றாரோ அவர் எம்மைச் சார்ந்தவரல்ல.'' (முஸ்லிம்)

3. பதுக்கல்

   ''பாவியைத் தவிர வேறு யாரும் பதுக்கலில் ஈடுபடமாட்டார்.'' (முஸ்லிம்)

4. விலை அதிகரிப்பு

   மக்களின் தேவையைப் பயன்படுத்தி அல்லது நாட்டின் நிலமைகளைக் கருத்திற்கொண்டு விலை அதிகரிப்பின் ஊடாகக் கொள்ளை இலாபம் அடைய முற்படுதலை இஸ்லாம் தடை செய்கின்றது.

5. கலப்படம் செய்தல்.
6. பொய் பேசுதல்.
7. திருட்டுப் பொருட்களை வாங்கல், விற்றல்
8. அபகரிக்கப்பட்ட பொருட்களை வாங்கல், விற்றல்.

## வட்டி

தற்கால உலகில் வியாபாரமும் வட்டியும் இரண்டறக் கலந்து காணப்படுகின்றது. வட்டி திட்டமிட்டு நுழைக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தில் ஆரம்ப காலத்தில் வட்டியையும் வியாபாரத்தையும் மக்கள் ஒன்றாகவே கருதிவந்தனர். இதனைக் கண்டித்து அல்-குர்ஆன், அல்-ஹதீஸ் என்பன பின்வருமாறு கூறுகின்றன.

***அல்லாஹுத்தஆலா வியாபாரத்தை ஹலாலாக்கி வட்டியைத் தடைசெய்துள்ளான்.'' (2:275)***

*''விசுவாசங் கொண்டோரே! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். மேலும் நீங்கள் (உண்மையாக) விசுவாசம் கொண்டவராக இருப்பின் வட்டியில் (எடுத்தது போக) எஞ்சியதை (எடுக்காமல்) விட்டு விடுங்கள்.'' (2:278) என்று அல்-குர்ஆன் கட்டளையிட்டது.*

அதுபோன்று ஹதீஸ்களும் வட்டியைத் தடைசெய்துள்ளன.

*வட்டிக்குப் பணம் கொடுப்பவர், வட்டி வாங்குபவர், அதனை எழுதுபவர், அதற்குச் சாட்சியாக இருக்கும் இருவர் ஆகிய இவர்கள் எல்லோரும் பாவத்தில் சமமானவர்கள் என ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.'' (முஸ்லிம்)*

எனவே ஒரு விசுவாசி தனது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் வட்டியைத் தவிர்த்து நடப்பது கட்டாயமாகும்.



இலவச விநியோகத்திற்காக

## கடன் வியாபாரம்

இன்றைய வர்த்தக உலகில் கடன் (வியாபாரம்) இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. மக்களுடைய தேவைகள் அதிகரித்தமையும் பொருளாதாரப் பிரச்சினைகளுமே இதற்குக் காரணமாகும். பல்வேறு தேவைகளுக்காக மனிதன் கடன்பெற வேண்டிய நிலமைக்கு உள்ளாகின்றான். கடன் பெறுகின்றவர் தான் பெறுகின்ற கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற நோக்கத்தோடு பெற வேண்டும். அவ்வாறாயின் அவனது கடனை அல்லாஹ் பொறுப்பேற்பதாக உத்தரவாதமளிக்கின்றான்.

''கடன் பெற்றவர் கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை அல்லாஹ் அவருடன் இருக்கின்றான்'' (இபுனு மாஜா)

கடன்பெறுவதால் தனது சுயகௌரவம், தன்மானம், மரியாதை போன்றவற்றை இழக்கும்நிலைக்கு மனிதன் தள்ளப்படுவான். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''யாஅல்லாஹ்! பாவத்திலிருந்தும் கடனிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன்.'' எனப் பிரார்த்தித்தபோது அதனைக்கேட்ட ஒருவர் அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் ஏன் அதிகமாகக் கடனிலிருந்து பாதுகாப்புத் தேடுகீன்றீர்கள்? என வினவினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடன்பட்டவன் பேசினால் பொய் பேசுவான், வாக்குறுதியளித்தால் மாறு செய்வான் அதனால்தான் கடனிலிருந்து பாதுகாவல் தேடுகின்றேன் என விளக்கமளித்தார்கள். (முஸ்லிம்)

எனவே எமது சகல கொடுக்கல் வாங்கல்களிலும் வட்டியையும் (அது எந்த வடிவில் இருந்தாலும்) முடியுமானளவு கடனையும் தவிர்த்து இஸ்லாம் கூறிய வழிமுறையில் நமது வாழ்வை அமைத்துக் கொள்வோமாக.

## செயற்பாடுகள்

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. ஒரு முஸ்லிம் வியாபாரி தனது வியாபார நடவடிக்கைகளில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் யாவை?
2. ஒரு வியாபாரம் நிறைவேறுவதற்கு அவசியமான அடிப்படை அம்சங்கள் யாவை?
3. 'நாணயமும் வாய்மையுமுடைய வியாபாரி' என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது யாது?
4. ஒரு முஸ்லிம் வியாபாரி தவிர்த்துக்கொள்ளவேண்டிய விடயங்களை அட்டவணைப்படுத்துக.

## 5.3 விவசாயமும் கைத்தொழிலும்

இஸ்லாம் உலகுக்கு அறிமுகமான காலம் முதல் ஏனைய தொழில்களைப் போலவே விவசாயத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வந்திருக்கின்றது. அத்தோடு மனிதர்கள் விவசாயத்தில் ஈடுபட வழிவகுத்தும் வலியுறுத்தியும் வந்துள்ளது. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விவசாயத்துக்கும் பல கைத்தொழில் முயற்சிகளுக்கும் தனது ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்து முன்மாதிரியைக் காட்டியுள்ளாகள்.

***அன்றி அவருக்கு இரும்பை (மென்மைபோல) மிருதுவாக்கித் தந்தோம். (சங்கிலி) போன்ற வளையங்களைச் (செய்து) ஒழுங்காக இணைத்து, போர்ச் சட்டையும் செய்யும் எனக் கட்டளையிட்டோம்***
***(ஸூரா ஸபஉ 10:11)***

இரும்பு, கைத்தொழிற் துறையில் மிக முக்கிய மூலப்பொருளாகக் காணப்படுகின்றது. அதன் மகிமையையும் பிரயோசனத்தையும் பற்றி எடுத்துக்கூறி மனிதனுக்கு இரும்பைப் பயன்படுத்துமாறு அல்லாஹுத்தஆலா கட்டளையிட்டுள்ளான்.

*மேலும் நிச்சயமாக தாவூதுக்கும் நாம் நம்மிடமிருந்து பேரருளைக் கொடுத்தோம். மலைகளே! நீங்கள் அவருடன் சேர்ந்து துதி செய்யுங்கள் என்று கூறினோம். மேலும் பறவைகளையும் அவருக்கு வசப்படுத்திக் கொடுத்தோம். இரும்பையும் அவருக்கு மிருதுவாக்கிக் கொடுத்தோம். மேலும் நிறைவான போர்க்கவசங்களைச் செய்வீராக! அவற்றின் வளையங்களின் அளவை ஒழுங்கு படுத்துவீராக! என்றும் நீங்கள் நற்கருமங்களையே செய்துகொண்டிருங்கள். நான், நீங்கள் செய்பவற்றைப் பார்க்கின்றேன் என்றும் கூறினோம்'' (ஸபஉ 10:11)*

``வியாபாரம் சிறந்த உழைப்பாகும். என்னைப் பொறுத்தவரை மிகவும் சிறந்த சம்பாத்தியம் விவசாயமாகும், ஏனெனில் அது தவக்கலுக்கு மிகவும் நெருக்கமானதாகும்.'' இமாம் ஷாபிஈ (ரஹ்)

கைத்தொழில் துறையிலும் விவசாயத்திலும் ஈடுபாடுகாட்டுகின்ற தொழிலாளர், விவசாயிகள், அறிஞர்கள், நிபுணர்கள் உட்பட அனைவரும் தமக்காக உழைத்தாலும் கூட தத்தமது செயற்பாடுகளினால் அறிவியல் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், புதிய தொழில் நுட்பங்கள் அறிமுகம்செய்தல், வறுமை ஒழிப்பு போன்ற துறைகளுக்கு பாரிய பங்களிப்பினைச் செய்து வருகின்றார்கள். இதன் மூலம் அல்லாஹ்வின் அருளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

### ஒப்படை

1. ``மேலும் நிச்சயமாக தாவூதுக்கும் நாம் நம்மிடமிருந்து .............'' என்ற பொருள் தரும் குர்ஆன் ஆயத்தை அறபியில் எழுதுக.


இலவச விநியோகத்திற்காக